ஸ்ரீ லங்கா விப்பக் கைவிப்பக் கேந்தி [முழுப் பதிப்புரிமையுடையது] All Rights Reserved]

Grade 12

GIT | T | I&II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாணவர்களுக்கான

# பொது தகவல் தொழிநுட்பவியல் பரீட்சை - ஜூலை 2025

Index No:

## பொது தகவல் தொழிநுட்பவியல் -I

நேரம் : 3.00 மணித்தியாலம்

1849

கவனிக்க:

- 1 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. $45_{10}$ இற்கு சமவலுவான இரும எண்
(1) 100101 (2) 100111 (3) 101101 (4) 110110

02. பின்வருவனவற்றுள் முறைவழிப்படுத்தப்படாதது
(1) ICT பாடத்தில் வினோத் பெற்ற புள்ளி
(2) அம்பாரையின் வருடாந்த மழைவீழ்ச்சி
(3) கமல் பெற்ற சராசரிப் புள்ளி
(4) றஹீமின் கணித பாடத்தில் உயர்புள்ளி

03. பின்வருவனவற்றுள் எதில் சுட்டும் சாதனங்கள் (Input Devices) மாத்திரம் இடம்பெறுகின்றன
(1) அச்சுப்பொறி, சுட்டி, இயக்குப்பிடி
(2) ஒளிப்பேனா, சுட்டி, தொடுதளம்
(3) விசைப்பலகை, சுட்டி, தொடுதளம்
(4) அச்சுப்பொறி, பல்லூடஎறியி, ஒலிபெருக்கி

04. பின்வருவனவற்றுள் கணினியின் பண்பு அல்லாதது
(1) செம்மை
(2) பொருத்தம்
(3) எல்லா அம்சமும் இருத்தல்
(4) கிரயம் அதிகரித்தல்

05. பின்வருவனவற்றுள் மூன்றாம் தலைமுறைக் கணினிகளில் பயன்படுத்தப்பட்ட பிரதான தொழிநுட்பம்
(1) வெற்றிடக்குழாய்
(2) நுண்முறைவழியாக்கி
(3) திரிதடையம்
(4) ஒருங்கிணைந்தசுற்று

06. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் ஆவணத்தின் கோவைக்குரிய கோப்பு நீட்சிக்கு (file extentoin) பொருத்தமானது
(1) accdp
(2) exe
(3) xlsx
(4) docx

07. பின்வருவனவற்றில் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள் அல்லாதது
(1) open office writer
(2) frame maker
(3) libre office Calc
(4) microsoft office word

08. RAM என்பதனால் வரையறுக்கப்படுவது
(1) Remote Authorization Mechanism
(2) Random Access Memory
(3) Read Accessed Memory
(4) Readily Accessed Memory

09. பின்வருவனவற்றுள் கணினியின் கோப்பு தொடர்பான தவறான கூற்று எது?
(1) கணினியின் தரவுகளைச் சேமிப்பதற்காக கோப்புகள் பயன்படுத்தப்படுகின்றன
(2) கோப்பின் பெயர் மாற்றப்படக்குடியது
(3) கோப்பினுள் கோப்புறைகளை உருவாக்கலாம்
(4) கோப்பின் பெயருக்கு .doc அல்லது .txt போன்ற நீட்டிப்பு காணப்படலாம்


infotechtamil.com

18. நுண்ணலை (Microwave), செங்கீழ் அலை (Infraredwave), வானொலி அலை(Radiowave) ஆகியன உதாரணங்களாகும். இவ்வாக்கியத்தில் உள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு உகந்த பதம் யாது?
(1) வழிப்படுத்தப்பட்ட ஊடகம் (Guided media)
(2) பாதுகாக்கப்படாத ஊடகம் (Founded media)
(3) வழிப்படுத்தப்படாத ஊடகம் (Unguided media)
(4) கட்டுண்ட ஊடகம் (Unprotected media)

19. ஒரு வட்டிலுள்ள மேலும் பயன்படுத்தாதவற்றை நீக்குவதற்குப் பயன்படுத்தத்தக்க பணிசெயல் முறைமையில் உள்ள பயன்பாட்டு மென்பொருள் (Utility Software) யாது?
(1) வட்டு ஒருங்கமைப்பு (Disk Defragmentation)
(2) வட்டுத் துப்பரவாக்குதல் (Disk Cleanup)
(3) வட்டுச் சரிபார்ப்பு (Disk Check)
(4) வட்டுப் பிரிவினை (Disk Partitioning)

20. இணையத்திற்கு பிரவேசிப்பதற்கு பின்வருவனவற்றில் எது அத்தியாவசியமன்று?
(1) IP முகவரி
(2) வலையமைப்பு இடைமுக அட்டை
(3) வலை மேலோடி
(4) இணையச் சேவையாளரின் சேவைகள்

21. ஓர் ஆவணத்திலுள்ள பந்திக் குறிகளையும் ஏனைய மறைந்துள்ள வடிவமைப்புக் குறியீடுகளையும் பார்ப்பதற்கு பயன்படுத்தப்படும் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளிர் பயன்படுத்தப்படும் கருவி எது?

(1) 
(2) 
(3) 
(4) 

22. பியூமி கடந்த ஆண்டு க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்தாள். அவள் சொல்முறைவழிப்படுத்தல் விரிதாள்,மின்னணு முன்வைப்பு மென்பொருள் ஆகியவற்றைப் அவள் பயன்படுத்தத்தக்கவள். அறிக்கைகள்,சஞ்சிகைகள், நூல்கள் போன்ற ஆவணங்களை வடிவமைத்து தயாரிக்கத்தக்கவள்.பின்வருவனவற்றில் எவை அவளுக்கான ஆற்றல்களை அடிப்படையாகக் கொண்டு அவளுக்கு கிடைக்கத்தக்க தொழில் வாய்ப்புக்களாகும்?
(1) தரவு உள்ளீட்டாளர், முறைமை பகுப்பாய்வாளர்
(2) மேசைக்கணினி வெளியீட்டாளர், கணினிப் பிரயோக உதவியாளர்
(3) வலை உருவாக்குனர், கணினிப் பிரயோக உதவியாளர்
(4) வலை உருவாக்குனர், முறைமைப் பகுப்பாய்வாளர்

infotechtamil.com

23. இரண்டு கொப்பிகளின் விலை ரூ.180/- உம் ஒரு பேனையின் விலை ரூ.20/- உம் ஆகும். மூன்று கொப்பிகளினதும் இரண்டு பேனைகளினதும் விலைகளின் கூட்டுத்தொகையின் துவித வடிவம்
(1) 10001000
(2) 11001000
(3) 11011100
(4) 11011010

24. பின்வருவனவற்றுள் எது துணைத்தேக்கச் சாதனங்களில் தரவு செலுத்துக் கதிகளை ஏறுவரிசையில் காட்டுகின்றது.
(1) திண்மநிலை வன்வட்டு, காந்த வன்வட்டு, நெகிழ் வன்வட்டு, DVD
(2) DVD , CD , RAM , ROM
(3) திண்மநிலை வன்வட்டு, காந்த வன்வட்டு, DVD , நெகிழ் வன்வட்டு
(4) CD, DVD , ROM , RAM

25. இலக்கமுறைக் கமராவின் தேக்கத்தின் (storage) கொள்ளளவு 32GB. இக்கமராவில் 1MB அளவுடைய எத்தனை நிழற்படங்கள் (photos) அதிகூடியளவில் (அண்ணளவாக) சேமிக்கப்படலாம்
(1) 32
(2) 62
(3) 32000
(4) 32 மில்லியன்

26. பின்வருவனவற்றுள் எது கணினியின் மூளையாக அழைக்கப்படுகின்றது?
(1) நுண்முறைவழியாக்கிச் சில்லு
(2) வன் தட்டு
(3) எண்கணித மற்றும் தருக்க அலகு
(4) தற்போக்கு பெறுவழி நினைவகம்

27. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A –.விரிதாள்,சொல்முறைவழிப்படுத்தல் போன்ற வசதிகளை வழங்கல்.

B – பயனர் இடைமுகத்தை வழங்கல்.

C – வன்பொருளை முகாமித்தல்.

மேற்குறித்தவற்றில் எவை ஒரு பணிசெயல் முறைமையின் அடிப்படைச் சேவைகளாகும்.

(1) C,B மாத்திரம் (2) A,C மாத்திரம்

(3) B,A மாத்திரம் (4) A,B,C ஆகிய எல்லாம்

28. பின்வரும் அட்டவணையில் நிரல் 1 இல் மென்பொருளின் சில வகுதிகளும் 2 இல் சில உதாரணங்களும் தரப்பட்டுள்ளன. எனினும் இவ்விரு நிரல்களிலும் உள்ள உருப்படிகள் பொருந்தாமல் இருக்கலாம். இரு நிரல்களுக்குமிடையே சரியான பொருத்தமாக்கல் யாது?

| வகுதிகள் | உதாரணங்கள் |
|---|---|
| ① பணிசெயல் முறைமைகள் | A: Java, BASIC |
| ② செய்நிரலாக்க மொழிகள் | B: LibreOffice Calc, Microsoft Excel |
| ③ சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருள் | C: LibreOffice Impress, Microsoft Powerpoint |
| ④ விரிதாள் மென்பொருள் | D: LibreOffice Writer, Microsoft Word |
| ⑤ முன்வைப்பு மென்பொருள் | E: Microsoft Windows, Ubuntu |

(1) 1→E, 2→A, 3→C, 4→D, 5→B (2) 1→D, 2→A, 3→B, 4→C, 5→E

(3) 1→B, 2→D, 3→C, 4→E, 5→A (4) 1→E, 2→A, 3→D, 4→B, 5→C

29. இலத்திரனியல் விரிதாளில் மாணவன் ஒருவனின் முதலாம் தவணையில்அனைத்துபாடங்களிலும் பெற்ற புள்ளிகளை காட்டுவதற்குப் பொருத்தமான வரைபு வகை?

(1) நிரல் வரைபு (2) கோட்டு வரைபு

(3) சலாகை வரைபு (4) வட்ட வரைபு

30. பின்வருவனவற்றில் எது மின்னாட்சிக்கு (e-Government) உதாரணங்களாகும்?

A- ஒருவர் தனது வாகனத்தின் அரசிறை உத்தரவுச் சீட்டுக்காக நிகழ்நிலையாக (Online) விண்ணப்பத்தல்.

B- மாணவர்கள் தமது பரீட்சைப் பெறுபேறுகளை அறிவதற்கு பரீட்சை திணைக்களத்தின் வலைத்தளத்திற்கு பிரவேசித்தல்

C- பாடசாலைப் பிள்ளைகளுக்கு நூல்களை வழங்குவதற்காக ஒரு பாடசாலை நூலகம் தன்னியக்க முறைமையை பயன்படுத்துதல்.

(1) A மாத்திரம் (2) A,B மாத்திரம் (3) B,C மாத்திரம் (4) A,B,C மாத்திரம்

31. "வித்தியாசப் பொறியினை (adding machine) வடிவமைத்தவர் ............................ ஆவார்". இடைவெளியினை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமானது எது?

(1) சார்லஸ் பபேஜ் (2) அடா ஒகஸ்ரா லவ்லேஸ்

(3) பிளெயிஸ் பஸ்கால் (4) ஜோன் வொன் நியூமன்

32. பின்வரும் சேமிப்பு ஊடகங்களில் எது அதிகுறைந்த களஞ்சிய கொள்ளளவினை உடையது

(1) CD (2) DVD (3) வன்வட்டு (4) நெகிழவட்டு


33. வலைப்பக்கத்தில் பட்டியலை உருவாக்க பயன்படுத்தப்படும் ஒட்டு

(1) <ul> (2) <ol> (3) <li> (4) யாவும்

infotechtamil.com

1861

34. தரப்பட்டுள்ள இலத்திரனியல் முன்வைப்பு மென்பொருளின் காட்சிக்கான சரியான இணைப்பு முறையே?




(1) Normal view, Slide show view, Reading view, Slide sorter view
(2) Normal view, Slide sorter view, Reading view, Slide show view
(3) Slide show view, Reading view, Slide sorter view, Normal view
(4) Normal view, Reading view, Slide sorter view, Slide show view

35,36,37 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவலைப் பயன்படுத்துக. மூன்று கணினி வன்பொருள் விற்பனை செய்கின்ற கடைகளில் காணப்படுகின்ற சில வன்பொருட்களின் விலைகள் கீழே ஓர் விரிதாளில் தரப்படுகின்றது.

| | A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|---|
| 1 | வன்பொருள் | கடை 1 | கடை 2 | கடை 3 | உயர்வு விலை | இழிவு விலை |
| 2 | Mouse | 3000 | 3500 | 4000 | | |
| 3 | Keyboard | 7000 | 6500 | 6000 | | |
| 4 | Pendrive | 4000 | 3500 | 3000 | | |
| 5 | VGA Cable | 1000 | 800 | 750 | | |
| 6 | மொத்த விலை | | | | | |
| 7 | சராசரி விலை | | | | | |

35. மூன்று கடைகளிலும் Mouse இனது ஆகக்கூடிய விலையினைக் கணிப்பதற்கு கலம் E2 இல் எழுதப்படவேண்டிய சூத்திரம் யாது?
(1) = SUM (B2:D2) (2) = MAX(B2:D2) (3)= MIN (B2:D2) (4) = COUNT (B2:D2)

36. கடை 1 இல் வன்பொருட்களின் மொத்த விலையினைக் கணிப்பதற்கு கலம் B6 இல் எழுதப்படவேண்டிய சூத்திரம் யாது?
(1) = SUM (B2:B5) (2) = AVERAGE (B2:B5) (3) = COUNT (B2:B5) (4) = MAX (B2:B5)

37. கடை 1 இல் வன்பொருட்களின் சராசரி விலையினைக் கணிப்பதற்கு கலம் B7 இல் எழுதப்படவேண்டிய சூத்திரம் யாது?
(1) = SUM (B2:B5) (2) = MAX (B2:B5) (3) = COUNT (B2:B5) (4) = AVERAGE (B2:B5)

- பின்வரும் தரவட்டவணையினைப் பயன்படுத்தி 37,38,39 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்கு

| CustomerID | CustomerName | CustomerCity | Gender |
|---|---|---|---|
| C1001 | J.Nilanthini | Jaffna | Female |
| C1002 | S.M.A.W.Ranaweera | Galle | Male |
| C1003 | S.M.A.Shahapdeen | Colombo | Male |

38. இவ் அட்டவணையில் முதன்மைச்சாவியாக (Primary key) அமையக்கூடிய புலம் எது?
(1) Gender (2)CustomerCity (3) CustomerName (4) CustomerID

39. இவ் அட்டவணையின் புலங்கள் மற்றும் பதிவுகளின் (fields and records) எண்ணிக்கைகள் முறையே பின்வருவனவற்றுள் எது?
(1) 5,4 (2) 4,4 (3) 4,3 (4) 3,4

40. இவ் அட்டவணையின் புலம் CustomerID இற்கு மிகவும் பொருத்தமான தரவு வகை யாது?
(1) Currency (2) Text (3) Lookup Wizard (4) Date

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව (முழுப் பதிப்புரிமையுடையது) All Rights Reserved

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாணவர்களுக்கான

# பொது தகவல் தொழிநுட்பவியல் பரீட்சை - 2025

Grade 12

| GIT | T | I&II |
|---|---|---|

Index No: | | | | | |

## பொதுத் தகவல் தொழிநுட்பவியல்-II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. a) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்குக

1. கணினிகளைப் பாதுகாப்பதற்குரிய இரு தருக்கப் பாதுகாப்பு (logical security) முறைகளைத் தருக.
2. நீர் கணினியில் தொடர்ச்சியாகக் கருமமாற்றும்போது உமக்கு ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகளைக் கையாளக்கூடிய முற்காப்பு நடவடிக்கைகள் இரண்டினை எழுதுக.
3. எமது நாட்டில் இலக்கப்பிரிப்பினைக் (digital divide) குறைப்பதற்கு நீர் பிரேரிக்கக்கூடிய மூன்று வழிவகைகளை எழுதுக.

b) கீழே தரப்படுகின்ற இடைவெளிகளைப் பட்டியலிலிருந்து சொற்களைப் பயன்படுத்தி நிரப்புக

1. ............................ ஆனது ஓர் வலைமேலோடி ஆகும்.
2. ............................ ஓர் மின்னஞ்சல் மென்பொருளாகும்
3. ............................ ஆனது இணையத்தில் ஓர் கணினியிலிருந்து இன்னோர் கணினிக்குக் கோப்புக்களைப் பிரதிசெய்வதற்குப் பொறுப்பானது.
4. ............................ ஆனது இணையத்தில் ஓர் வலைப்பக்கத்தினைத் தனித்துவமாக இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.
5. ............................ ஆனது இணையத்திற்கான ஓர் செம்மைநடப்பு ஒழுங்காகும்.

[URL, Mozilla firefox, TCP/IP, Pegasus, FTP]

(15 புள்ளிகள்)

infotechtamil.com

02. இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருள் தொடர்பாக பட்டியலிலிருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

பட்டியல் : { அசைவூட்டம்(Animation) / புதிய படவில்லை(New Slide) / Ctrl+N / Esc / F5 / படவில்லை மாறுகை(Slide Transition) / B /படவில்லை வரிசையாக்கி (Slide Sorter) / P/ N }

i. இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளில் படவில்லைக் காட்சியினை (slide show) நிகழ்த்துவதற்கு.................................... எனும் Key பயன்படும்.

ii. " Ctrl + M " சாவிச் சேர்மானத்தைப் பயன்படுத்துவதன் மூலம் .................................... செருகலாம்.

iii. .................................... என்பவை ஒரு படவில்லையிலிருந்து வெறொரு படவில்லைக்கு மாறும்போது உள்ள கட்புல இயக்கங்கள் (Visual Movement) ஆகும்.

iv. .................................... என்பவை ஒரு படவில்லையிலிருந்து தனி உருப்படிகளுக்கு பிரயோகிக்கப்படும் கட்புல விளைவுகள் (Visual Effects) ஆகும்.

v. ..................................... காட்சியானது நிறங்கள், பாடம், பின்னணி, விளைவுகள் மற்றும் எழுத்துரு உள்ளடங்கலான முழு முன்வைப்பினதும் பார்வையினைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

vi. ஒரு படவில்லைக் காட்சியில் (Slideshow) சாவி ......................... யை அழுத்தவதன் மூலம் முந்திய படவில்லையைப் பார்க்கலாம்.

vii. இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளில் புதிய நிகழ்த்துகையை உருவாக்க .................. எனும் சாவிச்சேர்மானம் பயன்படுத்தப்படும்.

viii. படவில்லைக் காட்சிப் பாங்கில் முன்வைப்பின் போது சில செக்கன்கள் நடப்பு வில்லையினது உள்ளடக்கத்தினை மறைப்பதற்கு ........................... எனும் Key பயன்படுத்தப்படும்.

xi. இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளில் படவில்லைக் காட்சியினை முடிப்பதற்கு ........................... எனும் Key பயன்படுத்தப்படும்.

(15 புள்ளிகள்)

03. a) SANUFURN தளபாடங்களின் ஆன்லைன் சில்லறை விற்பனையாளர். பின்வரும் விரிதாள் பல தளபாடங்களின் விலைகளைக் காட்டுகிறது, மேலும் ஒவ்வொரு பொருளுக்கும் தள்ளுபடி கலம் C2 இல் வழங்கப்படுகிறது. கீழே உள்ள விரிதாளைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | | GRAND SALE SANUFURN | | | |
| 2 | | Discount | 40% | | |
| 3 | | | | | |
| 4 | | Furniture | Price (RS) | Sale Price | Saving |
| 5 | 1 | Dining Table | RS. 85,000.00 | | |
| 6 | 2 | Cupboard | RS. 65,000.00 | | |
| 7 | 3 | Bed | RS. 45,000.00 | | |
| 8 | 4 | Sofa Set (A) | RS. 175,000.00 | | |
| 25 | 21 | Sofa Set (B) | RS. 210,000.00 | | |
| 26 | 22 | Office Table | RS. 35,000.00 | | |
| 27 | 23 | Sofa Set (c) | RS. 196,000.00 | | |
| 28 | | Cheapest Sale Price | | | |
| 29 | | Most Expensive Sale Price | | | |
| 30 | | Average Sale Price | | | |

i. ஒரு டைனிங் டேபிளின் விற்பனை விலையைக் கணக்கிட செல் D5 இல் நீங்கள் குறிப்பிடும் சமன்பாட்டை எழுதுங்கள்.

ii. மிகக் குறைந்த விலையுள்ள தளபாடப் பொருளின் விற்பனை விலையைக் கணக்கிட செல் C28 இல் நீங்கள் குறிப்பிடும் செயல்பாட்டின் பெயரை எழுதவும்.

iii. அலமாரியை வாங்கிய வாடிக்கையாளருக்கான நிலுவைத் தொகையைக் கண்டறிய செல் E6 இல் நீங்கள் குறிப்பிடும் சமன்பாட்டை எழுதவும்.


iv. சிறிது நேரத்திற்குப் பிறகு, மேலே உள்ள கடை ஒரு பொருளின் மீதான தள்ளுபடியை 36% ஆகக் குறைக்க முடிவு செய்தது. மாற்றம் செய்யப்படும்போது மாறும் கலங்களின் கலங்கள்/வரம்புகளைக் குறிப்பிடவும்.

v. விற்பனை விலைக்கும் சேமிப்புக்கும் இடையிலான இடைவெளியைக் காட்டும் விளக்கப்படத்தை ஸ்டோர் காட்ட வேண்டும். அதற்கு மிகவும் பொருத்தமான வரைபட வகையை எழுதவும்

(15 புள்ளிகள்)

infotechtamil.com

04. கமல் பல்கலைக் கழகத்தில் தற்போதுள்ள தனது கற்கைகள் பற்றிய மின்னஞ்வலைத் தனது தந்தைக்கு (somasiri@xamil.com) அனுப்புவதற்கு தீர்மானித்திருக்கும் அதே வேளை அதன் ஒரு நகலைத் தனது சகோதரனாகிய நிமாலிற்கு (nimal@xamil.com) அனுப்புகின்றான். கமல் வார இறுதியில் பெற்ற சில இலக்கமுறைப் ஒளி படங்களையும் இம்மின்னஞ்சலுடன் அனுப்ப வேண்டியுள்ளது. மேலும் இம்மின்னஞ்சல் கிடைக்கும் ஏனையோர் அறியாதவாறு அதன் ஒரு பிரதியை சாம் (sam@xmail.com) மாமாவிற்கும் கமல் அனுப்ப வேண்டியுள்ளது. முகப்படையாளங்கள் A- K உடன் கமல் பயன்படுத்திய மின்னஞ்சல் மென்பொருளின் இடைமுகம் (interfece) பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.




i. கமல் பின்ருவோரின் மின்னஞ்சல் முகவரியை எந்தப் புலங்களில் தட்டச்சிட வேண்டும்?

a. தந்தை	b. சகோதரன்	c. சாம் மாமா

ii. கமல் மின்னஞ்சற் செய்தியின் தலைப்பை எங்கே தட்டச்சிட வேண்டும்?

iii. கமல் இலக்கமுறை ஒளிப்படங்களை இணைப்பதற்கு எப்பொத்தானைத் தெரிந்தெடுக்க வேண்டும்?

iv. கமல் அனுப்பிய மின்னஞ்சல்களின் நகல்களைக் கொண்டுள்ள உறையின் (Folder) பொதுப் பெயரை எழுதுக.

v. கமல் அனுப்பிய மின்னஞ்சலில் ஒன்று திரும்பிவந்துள்ளது.

a - இம்மின்னஞ்சல் திரும்பி வந்தமைக்கான ஒரு காரணத்தை எழுதுக

b - கமல் திரும்பிவந்த மின்னஞ்சலை எம்மின்னஞ்சல் உறையில் காணலாம்?

b)

i. ஒரு கம்பனி பல்வேறு நாடுகளில் உள்ள அதன் கிளைகளின் பிரதிநிதிகளுடன் மாத முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவதற்கு காணொளி மாநாட்டைப் பயன்படுத்துகின்றது.

(a) காணொளி மாநாட்டுக்கு அத்தியாவசியமான மூன்று உருப்படிகளை எழுதுக.

(b) பாரம்பரிய நோருக்கு நேரான கூட்டங்களை விட காணொளி மாநாட்டின் இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக.

ii. நிகழ்நிலைக் கொள்வனவு (Online Shopping) பிரசித்தி பெற்று வருகின்றது. சாதாரண கொள்வனவுடன் ஒப்பிடும் போது நிகழ்நிலைக் கொள்வளவின் இரு அனுகூலங்களையும் இரு பிரதிகூலங்களையும் விளக்குக.

iii. ஒரு சில்லறைக் கடை உரிமையாளர் தனது தினசரிச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு ஒரு கணினியை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளார். அவர் தனது தேவையை பூர்த்தி செய ஒரு கணினியை வாங்குவதற்கு உங்களிடம் ஆலோசனை கேட்கிறார்.
ஒரு கணினியை கொள்வனவு செய்யும் போது கருத்திற்கொள்ள வேண்டிய மூன்று தொழிநுட்ப அம்சங்களையும் மூன்று தொழிநுட்பமற்ற அம்சங்களையும் எழுதுக. (15 புள்ளிகள்)

முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாணவர்களுக்கான

பொதுத் தகவல் தொழிநுட்பவியல் பரீட்சை 2025

Grade 12

T I

Index No:

நேரம் :

# புள்ளித் திட்டம்

infotechtamil.com

## பகுதி – I

| வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 11 | 4 | 21 | 3 | 31 | 1 |
| 2 | 1 | 12 | 4 | 22 | 2 | 32 | 4 |
| 3 | 2 | 13 | 3 | 23 | 3 | 33 | 4 |
| 4 | 4 | 14 | 4 | 24 | 4 | 34 | 2 |
| 5 | 4 | 15 | 4 | 25 | 3 | 35 | 2 |
| 6 | 4 | 16 | 2 | 26 | 1 | 36 | 1 |
| 7 | 3 | 17 | 4 | 27 | 1 | 37 | 4 |
| 8 | 2 | 18 | 3 | 28 | 4 | 38 | 4 |
| 9 | 3 | 19 | 2 | 29 | 3 | 39 | 3 |
| 10 | 3 | 20 | 1 | 30 | 4 | 40 | 2 |

## பகுதி – II

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | a | 1 | • Username & Password இடல்<br>• Backup எடுத்தல்<br>• மென்தீச்சுவர்<br>• Anti virus install பண்ணல் | 3 புள்ளிகள் |
| | | 2 | • கணினியை பயன்படுத்தும் போது சரியான கொண்ணிலையில் அமருதல்<br>• கணினி திரைக்கும் கண்ணுக்கும் இடையிலான தூரம் ஏறத்தாழ 45cm – 75cm ஆக இருத்தல்<br>• கண் களைப்படையாதவாறு கணினித்திரையில் ஒளியை சீராக்கல்<br>• பணியைச் செய்யும் போது குறுகிய ஓய்வெடுத்தலும் குறுகிய தூரத்திற்கு உலாவுதலும் | 3 புள்ளிகள் |
| | | 3 | • நாடு முழுவதும் நெனசல மையங்களை நிறுவுதல்.<br>• நாடு முழுவதும் வள மையங்களை நிறுவுதல்.<br>• குறைந்த செலவிலான கணனி படிப்புக்களை வழங்குதல்<br>• இலவச wifi மண்டலங்களை உருவாக்குதல் | 4 புள்ளிகள் |
| | b | 1 | Mozila Firefox | 1 புள்ளி |
| | | 2 | Pegasus | 1 புள்ளி |
| | | 3 | FTP | 1 புள்ளி |
| | | 4 | URL | 1 புள்ளி |
| | | 5 | TCP/IP | 1 புள்ளி |

infotechtamil.com

| | | | | |
|---|---|---|---|---|
| 02 | | | 1. F5<br>2. புதிய படவில்லை<br>3. படவில்லை மாறுகை<br>4. அசைவூட்டம்<br>5. Slide Sorter<br>6. P<br>7. Ctrl + N<br>8. B<br>9. Esc | 15 புள்ளிகள் |
| 03 | | a | 1. = C5 – (C5*$C$2)<br>2. = MIN(D5:D27)<br>3. = C6 – D6<br>4. D5 : D27 AND E5 : E27, C28, C29, C30<br>5. கோட்டு வரைபு | 15 புள்ளிகள் |
| 04 | a | i | a. B<br>b. C<br>c. D | |
| | | ii | E | |
| | | iii | H | |
| | | iv | Sent | |
| | | v | a. Invalid mail Id, பெறுனரின் Inbox நிரம்பியிருத்தல்<br>b. Trash | |
| | b | i | a. கணினிகள், வலைக்கமரா, இணையத் தொடர்பு, தொடர்பாடல் மென்பொருள்<br>b. ✦ பயணச் செலவு குறைவு<br>✦ பயண நேரத்தை சேமிப்பதன் மூலம் உற்பத்தித்திறன் அதிகரிப்பு<br>✦ நிகழ் நேர தொடர்பு மூலம் மேம்பட்ட ஒத்துழைப்பு<br>✦ தொலைதூர பணியாளர்களுடனான அணுக | |
| | | ii | **அனுகூலம்**<br>• இலகுவான கொள்வனவு முறை<br>• போக்குவரத்துக்கான செலவு குறைவு.<br>• போக்குவரத்துக்கான நேர விரையம் இல்லை<br>• விரும்பிய இடத்திலிருந்து பொருளைப் பெற்றுக் கொள்ளலாம்<br>• பல்வேறு பண கொடுக்கல் முறைகளை பயன்படுத்தலாம்<br>**பிரதிகூலம்**<br>• கொள்வனவு செய்வதற்கு முன்பு பொருட்களின் தரத்தினை நேரடியாக பார்வையிட முடியாது.<br>• பொருட்களில் குறைபாடுகள் காணப்பட்டால் திருப்பி அனுப்புவது கடினம்<br>• இணைய சேவை இல்லாத இடங்களில் மேற்கொள்ள முடியாது<br>• எல்லா சேவை நிலையங்களிலும் 100% நம்பிக்கை இன்மை | |
| | | iii | **தொழில்நுட்பவியல்**<br>• முறைவழியாக்கியின் கதி<br>• வன்வட்டின் கொள்திறன்<br>• நினைவகத்தின் கொள்திறன்<br>• திரையின் அளவு<br>**தொழில்நுட்பவியல் அல்லாத**<br>• கணினியின் விலை<br>• உத்தரவாதம்<br>• நிறுவனத்தின் நன்மதிப்பு<br>• விற்பனைக்கு பிந்திய சேவை | 15 புள்ளிகள் |

**திருத்தம் :**

வினா 10 – D15 கலத்திலிருந்து A1 கலத்துக்கு செல்வதற்குரிய குறுக்குச்சாவி என மாற்றவும்.

வினா 23 - இரண்டு கொப்பிகளினதும் இரண்டு பேனைகளினதும் விலைகளின் கூட்டுத்தொகையின் துவித வடிவம் என மாற்றவும்.